# நெல்லிக்குப்பம் நகராட்சி

## நகர் மன்றக் கூட்டம் நிகழ்ச்சி நிரல்

2019-ம் ஆண்டு ஜூலை மாதம் 31-ம் தேதி (31.07.2019) புதன்கிழமை மாலை 5.00 மணிக்கு நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற உள்ள நகர் மன்றத்தின் சாதாரண கூட்டத்தில் முடிவு செய்யப்படவுள்ள மன்றப்பொருள்கள் விபரம்.

முன்னிலை : – திரு. எஸ்.பிரபாகரன்.B.E
தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி

**மன்றபொருள் . 1.** தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் , கோவை நிறுவனத்திற்கு செலுத்த வேண்டிய 2018–19 ம் ஆண்டிற்கான பங்குத் தொகை ரூ.20000/– (இருபதானயிரம்) . இந்நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

1. அனுமதிக்கலாம் .
2. அவசர அவசியம் கருதி தனி அலுவலர் (ம) ஆணையாளர் முன் அனுமதி பெற்று தொகை வழங்கலாம் .

(ந.க.எண். 2505/2016/இ1)

**தீர்மான எண் : 143 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

**மன்றபொருள் . 2.** இந்நகராட்சியில் துப்புரவுப் பணியாளராக பணிபுரிந்து வந்த திரு. எம். மூர்த்தி என்பவர் 30.06.2019 அன்று ஓய்வு பெற்றுள்ளார், அவரது ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதித் தொகை (SPF) மற்றும் அதற்கான வட்டி தொகையினை வழங்குமாறு கோரியுள்ளார்.

அன்னாரின் விண்ணப்பம் உரிய பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதில் கீழ்கண்டுள்ள விவரப்படி திரு. எம். மூர்த்தி துப்புரவு பணியாளர் கணக்கில் உள்ள தொகையினை வழங்கப்பட வேண்டியுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | பணியில் சேர்ந்து 1984–1985 முதல் சிறப்பு சேமநலநிதி பிடித்தம் செய்யப்பட்ட நாள் | 1984-1985 |
| 2 | ஓய்வுபெற்ற நாள் | 30.06.2019 |
| 3 | சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை பிடித்தம் செய்த தவணைகள் | 148 தவணைகள். |
| 4 | சிறப்பு சேமநல நிதி கடைசியாக பிடித்தம் செய்யப்பட்ட மாதம் | 7/1996 |
| 5 | சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை பிடித்தம் செய்த தொகை | ரூ.2960/- |
| 6 | 01,08.1996 முதல் 30.06.2019 முடிய கணக்கிடப்பட்ட வட்டித்தொகை (கணக்கீட்டுத்தாள் இணைக்கப்பட்டுள்ளது) | ரூ.33600/- |
| 7 | நகராட்சி (அரசு) பங்குத் தொகை | ரூ . 10000/– |
| | மொத்தம் | ரூ.46560/- |

எனவே மேற்கண்டுள்ள விபரப்படி திரு. எம். மூர்த்தி, துப்புரவு பணியாளர் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை ரூ. 2960/– ம் அதற்குண்டான வட்டித்தொகை ரூ. 33600/– ம் நகராட்சி அரசு பங்கு தொகை ரூ. 10000/– சேர்த்து மொத்தம் ரூ.46560 /– வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்
**ந,க, எண். 1248/2019/பி2**
**<u>தீர்மான எண் : 144 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>மன்றபொருள்.3.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்பாதி மற்றும் நெல்லிக்குப்பம் கிராமம் வார்டு – D , பிளாக்– 19, T.S.No. 56 இடத்தின் பரப்பு 0,33 ஏக்கர் . இவ்விடம் அங்கீகரிக்கப்படாத மனைப்பிரிவாக அமைந்ததால் மனைப்பிரிவின் உரிமையாளர் திரு .S.ஜெயச்சந்தர் (Jeyachandar) என்பவர் குடியிருப்பு மனை பிரிவினை வரன் முறை செய்ய நகர் ஊரமைப்பு ஆணையருக்கு விண்ணப்பம் செய்ததின் பேரில் நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் வி.ம. அவர்கள் கொ.ஒ.ம.வ. / ந.ஊ.உ.இ (வி.ம.) எண்.R 516/2019 என எண்ணிடப்பட்டு குடியிருப்பு மனைப்பிரிவினை கொள்கையளவில் ஒப்புதல் செய்து இந்நகராட்சிக்கு 21.06.2019ல் வரப்பெற்றுள்ளது . A.A.A. மனைபிரிவில் உள்ள சாலை மற்றும் பூங்காவினை ரூ.100/– முத்திரை தாளில் தானமாக பெற மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.
**<u>அலுவலகக் குறிப்பு:-</u>**
நெல்லிக்குப்பம் கிராமம் கீழ்பாதி கிராமம் வார்டு – D , பிளாக்– 19, T.S.No. 56 இடத்தின் பரப்பு 0,33 ஏக்கர் குடியிருப்பு மனை பிரிவாக கொள்கையளவில் கொ.ஒ.ம.வ. / ந.ஊ.உ.இ (வி.ம.) எண் R 516/2019 என எண்ணிடடு வரப்பெற்றுள்ளது . இதிலுள்ள சாலை மற்றும் பூங்காவினை ரூ.100/– முத்திரை தாளில் தானமாக பெற மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது. மனுதாரறுக்கு கட்டணங்கள் செலுத்தியதும் மனைக்கு வரன்முறை உத்திரவு அளிக்கலாம் .
**ந.க.எண்:- 1846/2019/எப்1**
**<u>தீர்மான எண் : 145 அலுவலக குறிப்பினை ஏற்று ஒப்புதல் அளிக்கப்பட்டது .</u>**

**<u>மன்றபொருள்.4.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சியில் பயன்படுத்தி வரும் பிறப்பு மற்றும் இறப்பு பதிவேடுகள் பெரிய அளவு புத்தகங்கள் மற்றும் சிறிய அளவு புத்தகங்களை நல்ல முறையில் பைண்டிங் செய்து தர 08.07.2019 அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் ஒப்பு நோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் பெயர்/முகவர் | | ஜீலைப்புள்ளி ரூ. (ஒரு புத்தகத்திற்கு ) |
|---|---|---|---|
| 1 | G.Rajavel Book Binder Puducherry | பெரிய புத்தகம்<br>சிறிய புத்தகம் | ரூ.365/–<br>ரூ.160/– |
| 2 | Sri Krishna Vilasam Book Binding Cuddalore | பெரிய புத்தகம்<br>சிறிய புத்தகம் | ரூ.385/–<br>ரூ.175/– |
| 3 | Dhanan Cards and Printers Cuddalore | பெரிய புத்தகம்<br>சிறிய புத்தகம் | ரூ.390/–<br>ரூ.185/– |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் வரிசை எண் . 1ல் கண்ட G.Rajavel Book Binder, Puducherry என்பவர் கொடுத்துள்ள விலைப்புள்ளி குறைவாக உள்ளதால் , மேற்படி நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று பணி மேற்கொள்ள உத்திரவு வழங்கலாம் . மன்றத்தின் அனுமதிக்கு .
**ந.க.எண்:- 1742/2019/எச்1**
**<u>தீர்மான எண் : 146 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>மன்றபொருள்.5.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு சொந்தமான வரிவசூல் ஒலிபெருக்கி ஆம்பளியர் பழுது சரி செய்யப்பட்டு பட்டியல் தொகை நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் திரு . ஜெயராமன் , ஒயர்மேன் அவர்களுக்கு ரூ.1500/– வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது .
அலுவலக குறிப்பு . மன்றம் பதிவு செய்யலாம் .
**ந.க.எண்:- 814/2019/E1**
**<u>தீர்மான எண் : 147 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது . .</u>**

**<u>மன்றபொருள்.6.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு ஜம்புலிங்கம் பூங்கா மற்றும் மேல்பாதி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டியில் உள்ள ஆழ்துளை கிணறு சம்மெர்சிபில் மோட்டார் பழுதடைந்ததை புதியதாக வாங்கி பொருத்தியதற்கு நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் ஒப்பந்ததாரர் M/s.அருணாச்சல அசோசியேட் , நெல்லிக்குப்பம் அவர்களுக்கு குடிநீர் நிதியிலிருந்து ரூ.144682/– வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது .

அலுவலக குறிப்பு . மன்றம் பதிவு செய்யலாம் .

**ந.க.எண்:- 1526/2019/இ1**

**<u>தீர்மான எண் : 148 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .</u>**

**<u>மன்றபொருள்.7.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சியில் ஆடு மற்றும் மாடுகள் உள்ளே புகுந்து வருகிறது . இதனால் நகராட்சி அலுவலகத்தில் உள்ள பூச் செடிகளை தின்று நாசம் செய்கிறது . எனவே வெளியில் இருந்து ஆடு மாடுகள் அலுவலகத்தின் உள்புறம் லராமல் தடுப்பதற்கு முன்புறம் உள்ள நுழை வாயிலில் தரையில் பள்ளம் எடுத்து இரும்பு குழாய் பதிப்பதற்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.50000/– ஐ நகராட்சி வருவாய் நிதியில் இருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

அலுவலக குறிப்பு . மன்றம் பதிவு செய்யலாம் .

**ந.க.எண்:- 2320/2019/இ1**

**<u>தீர்மான எண் : 149 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .</u>**

**<u>மன்றபொருள்.8.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி அலவலக ஆணையர் அறையில் இயங்கி வந்த CCTV கேமரா உபகரணங்களில் குறுக்கு மின் சுற்று ஏற்பட்டு சர்க்யூட் , போர்ட , எலிமினேட்டர் கேமரா பழுதாகி விட்டபடியால் அதனை பழுது நீக்கவும் மற்றும் அலுவலகத்தில் இரண்டு புதிய கேமரா பொருத்தவும் அதனை சார்ந்த உபகரணங்கள் வாங்கவும் தோரய மதிப்பீடு ரூ.18000/– ஐ நகராட்சி வருவாய் நிதியில் இருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

அலுவலக குறிப்பு . மன்றம் பதிவு செய்யலாம் .

**ந.க.எண்:- 2321/2019/இ1**

**<u>தீர்மான எண் : 150 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .</u>**

**<u>மன்றபொருள்.9.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 13 மேல்நிலை தண்ணீர் தொட்டிகளும் 25 எண்ணிக்கை ஆழ்துளை கிணறுகளுடன் கூடிய மின் மோட்டார்களும் , 15 சிறு மின்விசை பம்புகளும் உள்ளன. இதன் முலம் தினந்தேறும் மோட்டார் பம்புகளை இயக்கி நகரில் காலை, மாலை இரு வேலைகளிலும் குடிநீர் விநியோகம் பொதுமக்களுக்கு சீரான முறையில் தங்கு தடையின்றி செய்யப்பட்டு வருகிறது. தற்சமயம் இந்நகராட்சியில் நீர்தேக்க தண்ணீர் தொட்டி காவலர் 5 பேர் மின் கம்பியாளர்–1 நபரைக் கொண்டு தினந்தோறும் மோட்டார் பம்புகளை இயக்கி மேல்நிலை தண்ணீர் தொட்டிகளில் தண்ணீர் நிரப்பி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்தபணிக்காக ஆட்கள் பற்றாகுறையாக உள்ளது மேலும் நகரில் உள்ள 48 கிலோ மிட்டர் பகிர்மான குழாய்களில் ஏற்படும் அடைப்பு மற்றும் உடைப்புகளை சரிசெய்யும் மின் மோட்டார் பம்புகளில் ஏற்படும் பழுதுகளை சரி செய்யவும், மோட்டார் ஸ்டாட்டர்களில் ஏற்படும் பழுதுகளையும் மின் பழுதுகளையும் உடனுக்குடன் சரிசெய்யவும் மேலும் குடிநீர் நீர்தேக்க தண்ணீர் தொட்டிகளை சுத்தம் செய்யவும் மேலும் குடிநீர் பராமரிப்பு பணிகளை உடனுக்குடன் செய்யவும் போதிய பணி ஆட்கள் குடிநீர் பிரிவில் இல்லை .இதனால் குடிநீர் விநியோகம் பாதிக்கும் நிலையில் உள்ளது. எனவே குடிநீர் விநியோக அவசரம் அவசியம் கருதியும் பொதுமக்கள் நலன்கருதியும் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டு தொகை ரு. 9,00,000/–ஐ செலவை குடிநீர் விநியோக நிதியில் இருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு ;- மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 2352 /2018/இ1)**

**<u>தீர்மான எண் : 151 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>மன்றபொருள்.10.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட நகராட்சி அலுவலக அருகில் உள்ள பகுதியில் புதிய துப்புரவு பணியாளர்களின் குடியிருப்பு வளாகத்தின் உள்ள ஆழ்குழாய் கிணறு மற்றும் மோட்டார் பம்பு பழுதடைந்து உபயோகப்படுத்த இயலாத நிலையில் உள்ளது. இதனால் துப்புரவு பணியாளர்களின் குடியிருப்பில் உள்ள நகராட்சி பணியாளர்கள் குடிதண்ணீர் இல்லாமல் மிகவும் சிரமபட்டு வருகின்றனர் . எனவே மேற்படி தண்ணீர் தட்டுப்பாட்டை போக்க தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.500000/—ஐ நகராட்சி குடிநீர் விநியோக நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

<u>அலுவலகக்குறிப்பு:—</u> மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் . 1890/2019/இ1)**

**<u>தீர்மான எண் : 152 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>மன்றபொருள்.11.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தூய்மை பாரதம் திட்டத்தின் கீழ் தனி நபர் கழிப்பிடங்கள் கட்டும் பணி சம்மந்தமாக சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அறிவுறையின் படி களஆய்வு மேற்கொள்ளப்பட்டதில் ஏற்கனவே கட்டி முடிக்கப்பட்ட 1355 தனி நபர் கழிப்பிடங்கள் போக கூடுதலாக 1738 எண்ணிக்கையில் கழிப்பறைகள் இல்லாத குடியிருப்புகள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளதால், 1738 குடும்பங்களுக்கும் தனிநபர் கழிப்பறை கட்டுதல் அவசியமாகிறது. மேற்படி பணிகளை மேற்கொள்ள கீழ்கண்டவாறு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

| | |
|---|---|
| அனுமதிக்கப்பட்ட தொகை | ரூ. 139.04 இலட்சம். |
| மத்திய அரசு பங்குத் தொகை | ரூ. 69.52 இலட்சம். |
| மாநில அரசு பங்குத் தொகை | ரூ. 34.76 இலட்சம். |
| நகராட்சி பங்களிப்பு | ரூ. 34.76 இலட்சம். |
| பயனாளிகளின் பங்களிப்பு | ரூ. 69.52 இலட்சம். |

தனிநபர் கழிப்பிடம் அமைக்கும் திட்டம் ஆரம்பிக்கப்படும் போது ஒரு கழிப்பிடம் ரூ. 12,000/— வீதம் மதிப்பீட்டில் அமைக்க ஒதுக்கீடு செய்யப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் ரூ. 8000/— மானியமாகவும், மீதமுள்ள தொகையினை பயனாளிகள் தங்கள் பொறுப்பில் பங்களிப்பு செய்து பணி முடிக்கும் வகையில் திட்டமிடப்பட்டது. மேற்படி பயனாளிகளிடமிருந்து தொகை பெற்று பணி மேற்கொள்வது இயலாமல் போனதால், கடந்த ஆண்டு நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களால் ஒரு கழிப்பிடத்திற்கு ரூ. 3000/— வீதம் தொழில் நிறுவனங்கள் மற்றும் வணிக நிறுவனங்களிடமிருந்து சமுதாய பொறுப்புணர்வு நிதி (CSR ) மூலம் தொகை பெற்று ரூ. 8000/—க்கு பதிலாக மேற்படி ரூ. 3000/— சேர்த்து மொத்தம் ரூ.11000/— தொகை வழங்கும் வகையில் பணிகளை முடிக்க உரிய அறிவுரையும், உத்திரவும், நிதி ஒதுக்கீடும் பெறப்பட்டது.

அதன்படி தற்போது இதுநாள் வரை 612 எண்ணிக்கை கழிப்பிடங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 1126 எண்ணிக்கையிலான கழிப்பிடங்கள் கட்டி முடிக்க சமுதாய பொறுப்புணர்வு நிதி ரூ.33.78 இலட்சம் தேவையாக உள்ளது. மேலும் தனிநபர் கழிப்பிடம் ஒப்பந்தக்காரர் மூலம் கட்டி முடிக்கக்கட்டு சமுதாய பொறுப்புணர்வு நிதி வழங்கப்படாமல் 206 கழிப்பிடங்களுக்கு சமுதாய பொறுப்புணர்வு நிதி ரூ.6.16 வழங்கப்படாமல் உள்ளது, ஆக மொத்தம் ரூ.39.14 இலட்சம் சமுதாய பொறுப்புணர்வு நிதி இலட்சம் தேவையாக உள்ளது. சமுதாய பொறுப்புணர்வு நிதி வழங்கத் தெரிவித்து நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டது. இந்நிலையில் 17.10.2018ல் கூடுதல் நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களது களஆய்வு மற்றும் ஆய்வுக் கூட்டத்தின் போதும், 19.11.2018 நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களால் இந்நகராட்சியில் நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் சமுதாய பொறுப்புணர்வு நிதி பெறுவது காலதாமதம் ஏற்படும் என்பதனால் நகரத்தின் சுற்றுப்புறத்தையும் பொது சுகாதாரத்தையும் பாது காக்கும் வகையில் மேற்படி தொகையை ரூ. 39.14 இலட்சத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து செலவு செய்து கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு –

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தூய்மை பாரதத் திட்டத்தின் கீழ் 1126 எண்ணிக்கை கழிப்பிடங்கள் கட்டி முடிக்க சமுதாய பொறுப்புணர்வு நிதி ரூ.39.14 இலட்சம் நகராட்சி பொது நிதியிலிருந்து செலவிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் . 2438/2015/எச்2)**

**<u>தீர்மான எண் : 153 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>மன்றபொருள்.12.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு சொந்தமான வாகனம் டம்பர் பிளேசர் எண் .TN-31/AE-0781 உபயோகப்படுத்தப்பட்ட வாகனம் “ தூய்மை இந்நியா திட்டத்தின் கீழ் மாற்று பணிகள் மாற்றப்பட்டதால் உபயோகம் அற்ற நிலையில் உள்ளது . எனவே மேற்படி வாகனத்தை சுகாதார பணிகள் அவசர அவசியம் கருதியும் பொது மக்கள் நலன் கருதியும் “ கழிவு நீர் சேகரிப்பு வாகனமாக “ மாற்ற மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு ;- மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.1688 /2019/இ1)**

**<u>தீர்மான எண் : 154 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>மன்றபொருள்.13.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு சொந்தமான வாகனம் டம்பர் பின் எண் TN-31/AJ-5990 உபயோகப்படுத்தப்பட்ட வாகனம் “ தூய்மை இந்நியா திட்டத்தின் கீழ் மாற்று பணிகள் மாற்றப்பட்டதால் உபயோகம் அற்ற நிலையில் உள்ளது . எனவே மேற்படி வாகனத்தை அவசர அவசியம் கருதியும் பொது மக்கள் நலன் கருதியும் நகரில் குடிதண்ணீர் தட்டுபாடு ஏற்படும் காலங்களில் குடிநீர் வழங்குவதற்கு எதுவாக “குடிநீர் வாகனமாக மாற்ற” மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு ;- மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.1687 /2019/இ1)**

**<u>தீர்மான எண் : 155 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>மன்றபொருள்.14 .</u>** நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட வார்டு எண் . 30ல் உள்ள சரவணபுரத்தில் மக்கம் குப்பைகளை பிரித்து எடுக்கும் மையத்தில் தண்ணீர் வசதி இல்லாமல் சுகாதார பணியாளர்கள் மிகவும் சிரமப்படுகின்றனர் . எனவே மேற்படி இடத்தில் தண்ணீர் வசதி செய்யும் வகையில் அப்பகுதியில் ஒரு ஆழ் குழாய் கிணறு அமைக்க தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ. 450000/– ஐ குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு ;- மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 2427 /2019/இ1)**

**<u>தீர்மான எண் : 156 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>மன்றபொருள்.15 .</u>**நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட வார்டு எண்.3ல் உள்ள முள்ளிகிராம்பட்டு நகராட்சி பள்ளியில் புதியதாக கட்டப்பட்ட இரண்டு வகுப்பறைகளில் கூடுதல் பணிகள் செய்ய வேண்டியுள்ளது . மேற்படி பள்ளி கட்டிடத்தில் கூடுதல் பணிகள் செய்வதற்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ. 725000/– ஐ கல்வி வரி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு ;- மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 2428 /2019/இ1)**

**<u>தீர்மான எண் : 157 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>மன்றபொருள்.16 .</u>**நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட வார்டு எண்.3ல் உள்ள முள்ளிகிராம்பட்டு பகுதியில் பொது மக்கள் குடி தண்ணீர் வசதியில்லாமல் சிரமப்பட்டு வருகின்றனர் . எனவே பொது மக்கள் வசதிக்காகவும் , குடி தண்ணீர் பிரச்சனையை தீர்க்கும் வகையில் அப்பகுதியில் மினி பவர் பம்பு அமைக்க

தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ. 400000/— ஐ குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு ;- மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 2529 /2019/இ1)**

**<u>தீர்மான எண் : 158 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>மன்றபொருள்.17 .</u>** நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட வார்டு எண். 16 ஜீவா நகரில் உள்ள பகுதியில் பொது மக்கள் குடி தண்ணீர் வசதியில்லாமல் சிரமப்பட்டு வருகின்றனர் . எனவே பொது மக்கள் வசதிக்காகவும் , குடி தண்ணீர் பிரச்சனையை தீர்க்கும் வகையில் அப்பகுதியில் மினி பவர் பம்பு அமைக்க தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ. 400000/— ஐ குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு ;- மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 2531 /2019/இ1)**

**<u>தீர்மான எண் : 159 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>மன்றபொருள்.18 .</u>** நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட வார்டு எண். 30 சரவணபுரத்தில் உள்ள பொது மக்கள் தண்ணீர் வசதிக்காக சின்டெக்ஸ் டாங்குடக் கூடிய மினி பவர் பம்பு அமைக்குமாறு கோரியுள்ளார்கள் . . எனவே பொது மக்கள் வசதிக்காகவும் , குடி தண்ணீர் பிரச்சனையை தீர்க்கும் வகையில் அப்பகுதியில் மினி பவர் பம்பு அமைக்க தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ. 400000/— ஐ குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு ;- மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2530 /2019/இ1)**

**<u>தீர்மான எண் : 160 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>மன்றபொருள்.19 .</u>** கடலூர் மாவட்ட சுகாதார பிரிவு துறை மூலம் ஆய்வு மேற்கொண்ட போது, இந்நகராட்சி மூலம் பணிப்புரியும் டெங்கு களப்பணியாளர்களுக்கு தேவையான டார்ச் லைட், கரண்டி, முககவசம் மற்றும் கையுரை ஆகிய உபகரணங்கள் வழங்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையிலும், மழைகாலம் நெருங்கி வருவதாலும், காய்ச்சல் மற்றும் இதர நோய்கள் பரவா வண்ணம் தடுக்கும் பொருட்டும், டெங்கு களப்பணியாளர்களுக்கு தேவையான அத்தியவசியமான மேற்படி உபகரணங்கள் வாங்கிக் கொடுக்க கோரி துப்புரவு ஆய்வர் பொறுப்பு அவர்கள்குறிப்பு வழங்கியுள்ளார். அதன்படி உபகரணங்கள் கொள்முதல் செய்யவும், அதற்கான செலவினத் தொகையினை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

பொது சுகாதாரம் மற்றும் டெங்கு தடுப்பு நடவடிக்கையின் அவசர அவசியம் கருதி, மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் 1962/2019/எச்1**

**<u>தீர்மான எண் : 161 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>மன்றபொருள்.20 .</u>**நெல்லிக்குப்பம் நகராட்சி பொதுசுகாதரம் மற்றும் டெங்கு தடுப்பு நடவடிக்கைக்கு தேவையான உபகரணங்கள் கொள்முதல் செய்திட 02.07.2019 அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் பெயர்/ முகவரி | விலைப்புள்ளி ரூ. ஒரு எண்ணத்திற்கு | | | |
|---|---|---|---|---|---|
| | | முக கவசம் | கையுரை | கரண்டி | டார்ச் லை ட் |
| 1 | திருமதி. எஸ்.புவனேஸ்வரி<br>ஒப்பந்தக்காரர்<br>நெல்லிக்குப்பம் | ரூ.25/— | ரூ.85/— | ரூ.160/— | ரூ.590/— |
| 2 | சுபத்தரா எண்டர்பிரைசஸ்<br>நெல்லிக்குப்பம் | ரூ.30/— | ரூ.95/— | ரூ.170/— | ரூ.610/— |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3 | ஜெய் அன்ட் கோ<br>கடலூர் | ரூ.28/– | ரூ.90/– | ரூ.165/– | ரூ.600/– |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் வரிசை எண் 1 ல் கண்ட திருமதி எஸ்.புவனேஸ்வரி ஒப்பந்தக்காரர் நெல்லிக்குப்பம் கொடுத்துள்ள விலைப்புள்ளி குறைவாக உள்ளதால், மேற்படி ஒப்பந்தக்காரர் கொடுத்துள்ள விலைப்புள்ளியை ஏற்று பணி மேற்கொள்ள உத்திரவு வழங்கலாம். மன்றத்தின் அனுமதிக்கு .

<u>அலுவலகக்குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்1962/2019/எச்1)**

**<u>தீர்மான எண் : 162 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>மன்றபொருள்.21 .</u>** கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஆய்வு கூட்ட அறிவுரையின்படி, மழை நீர் சேகரிப்பு குறித்து பொதுமக்களிடளே விழிப்புணர்வு ஏற்படுத்தும் பொருட்டு, அனைத்து பள்ளி மாணவ மாணவிகள், வர்த்தக சங்கம், அரசு ஊழியர்கள் ஆகியோர் கலந்து பேரணி நடத்திட அறிவுறுத்தப்பட்டிருந்தது.அதன்படி இந்நகராட்சி பகுதியில் அனைத்து பள்ளி மாணவ மாணவிகள்,வர்த்தக சங்கம் மற்றும் நகராட்சி ஊழியர்கள் கலந்துக்கொண்டு மழைநீர் சேகரிப்பு விழிப்புணர்வு பேரணி நடத்திடவும், அதற்கான விளம்பர பதாகை, பேணர்கள் மற்றும் இதர செலவினங்கள் மேற்கொண்ட வகைக்கு இந்நகராட்சி பொது பணி மேற்பார்வையாளரால் உத்தேச செலவினத் தொகை ரூ.19000/– ஆகும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும், விளம்பர பதாகை மற்றும் பேனர்கள் செய்ய உள்ளூர் விவைப்புள்ளி பெற்று பணி மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு

மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அறிவுரையின் படி பணி மேற்கொள்ளவும், செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் 1592/2019/எச்1)**

**<u>தீர்மான எண் : 163 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>மன்றபொருள்.22 .</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி பகுதியில் மழைநீர் சேகரிப்பு குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் விளம்பர பதாகை மற்றும் பேணர்கள் செய்து தரும் பொருட்டு 12.07.2019 அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் பெயர்/ முகவரி | விலைப்புள்ளி ரூ. |
|---|---|---|
| 1 | திருமதி. எஸ்.புவணேஸ்வரி<br>ஒப்பந்தக்காரர்<br>நெல்லிக்குப்பம் | ரூ.250/–<br>ஒரு எண்ணதிற்கு |
| 2 | சுபத்தரா எண்டர்பிரைசஸ்<br>நெல்லிக்குப்பம் | ரூ.300/–<br>ஒரு எண்ணதிற்கு |
| 3 | ஜெய் அன்ட் கோ<br>கடலூர் | ரூ.280/–<br>ஒரு எண்ணதிற்கு |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் வரிசை எண் 1 ல் கண்ட திருமதி எஸ்.புவனேஸ்வரி ஒப்பந்தக்காரர் நெல்லிக்குப்பம் கொடுத்துள்ள விலைப்புள்ளி குறைவாக உள்ளதால், மேற்படி ஒப்பந்தக்காரர் கொடுத்துள்ள விலைப்புள்ளியை ஏற்று பணி மேற்கொள்ள உத்திரவு வழங்கலாம். மன்றத்தின் அனுமதிக்கு

<u>அலுவலகக்குறிப்பு</u>

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்1592/2019/எச்1)**

**<u>தீர்மான எண் : 164 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>மன்றபொருள்.23 .</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி பொதுசுகாதார பிரிவில் திடக்கழிவு பணி மேற்கொள்ள பயன்படுத்தப்பட்டு வரும் வாகன எண் TN 31 AH 6642 க்கான தகுதி சான்று **23.07.2019** உடன் முடிவு பெறுவதால் , இவ்வாண்டிற்கு தகுதி சான்றினை புதுப்பிக்க வேண்டி மேற்படி வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கம் செய்ய வேண்டியுள்ளது. பொது சுகாதார பணியின் அவசரம் கருதி உடன் பணி மேற்கொள்ள உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொள்வும், செலவினத் தொகையினை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு .** மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண் 1692/19/H1)**

**<u>தீர்மான எண் : 165 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>மன்றபொருள்.24 .</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் உள்ள வாகன எண் TN 31 AH 6642 தகுதி சான்று பெற பழுதுநீக்கம் செய்து தரும் பொருட்டு **25.07.2019** அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் பெயர்/ முகவரி | விலைப்புள்ளி ரூ. |
|---|---|---|
| 1 | M/S. OM Sakthi Engineering works<br>DSN Nagar , Nellikuppam | ரூ.**47,300/–**<br>+ 18 % GST |
| 2 | Vijayalakshmi Automobiles<br>Cuddalore | ரூ.**51,300/–**<br>+ 18 % GST |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் வரிசை எண் **1** ல் கண்ட M/S. OM Sakthi Engineering works என்ற நிறுவனம் கொடுத்துள்ள விலைப்புள்ளி குறைவாக உள்ளதால், மேற்படி நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று பணி மேற்கொள்ள உத்திரவு வழங்கலாம். மன்றத்தின் அனுமதிக்கு

**<u>அலுவலகக்குறிப்பு .</u>** மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்1692/2019/எச்1)**

**<u>தீர்மான எண் : 166 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>மன்றபொருள்.25 .</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி பொதுசுகாதார பிரிவில் திடக்கழிவு பணி மேற்கொள்ள பயன்படுத்தப்பட்டு வரும் வாகன எண் TN 31 AH 6556 க்கான தகுதி சான்று **29.07.2019** உடன் முடிவு பெறுவதால் , இவ்வாண்டிற்கு தகுதி சான்றினை புதுப்பிக்க வேண்டி மேற்படி வாகனத்தில் உள்ள பழுதுகளை நீக்கம் செய்ய வேண்டியுள்ளது. பொது சுகாதார பணியின் அவசரம் கருதி உடன் பணி மேற்கொள்ள உள்ளூர் விலைப்புள்ளி பெற்று பணி மேற்கொள்வும், செலவினத் தொகையினை இந்நகராட்சி பொது நிதியில் இருந்து செலவு செய்திடவும் மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண் **1694/19/H1)**

**<u>தீர்மான எண் : 167 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.</u>**

**<u>மன்றபொருள்.25 .</u>** நெல்லிக்குப்பம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் உள்ள வாகன எண் TN 31 AH 6556 தகுதி சான்று பெற பழுதுநீக்கம் செய்து தரும் பொருட்டு **25.07.2019** அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் மன்றத்தின் அனுமதிக்கு

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் பெயர்/ முகவரி | விலைப்புள்ளி ரூ. |
|---|---|---|
| 1 | M/S. OM Sakthi Engineering works<br>DSN Nagar , Nellikuppam | ரூ.**49,300/–**<br>+ 18 % GST |
| 2 | Vijayalakshmi Automobiles<br>Cuddalore | ரூ.**53,800/–**<br>+ 18 % GST |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் வரிசை எண் 1 ல் கண்ட M/S. OM Sakthi Engineering works என்ற நிறுவனம் கொடுத்துள்ள விலைப்புள்ளி குறைவாக உள்ளதால், மேற்படி நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று பணி மேற்கொள்ள உத்திரவு வழங்கலாம். மன்றத்தின் அனுமதிக்கு

**அலுவலகக்குறிப்பு .** மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்1694/2019/எச்1)**

**தீர்மான எண் : 168 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.**

தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி

**மன்றபொருள்.11.** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 30 வார்டுகளிலும் தெருவிளக்கு கம்பங்களில் உள்ள LED மின் விளக்குகள் பழுதாகி உள்ளதை சரி செய்து எரிய வைக்க வேண்டும் .அதற்கு இரண்டு மின் பணியாளர்கள் மற்றும் ஒரு மின் பணி உதவியாளர்கள் தேவைப்படுகிறது . இவர்களுக்கு ஒரு LED விளக்கை பழுது பார்ப்பதற்கு தரப்படுத்தப்பட்ட விலை விகிதம் ரூ.450/— அகும் . இப்பணியை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு ;- மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 2349 /2019/இ1)**

**மன்றபொருள்.12** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட 30 வார்டுகளிலும் 2 வருடங்களுக்கு பொருத்தப்பட்ட தெருவிளக்கு கம்பங்களில் உள்ள LED மின் விளக்குகள் மழையினால் இடி மின்னல் தாக்கி சேதமடைந்துவிட்டது . இதனை புதியதாக மாற்றி பொறுத்துவதற்கு 100 LED விளக்குகள் தேவைப்படுகிறது . இப்பணியை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு ;- மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2351 /2019/இ1)**

**மன்றபொருள்.11.** நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு சொந்தமான மருத்தவமனையில் உள்ள பிரசவ விடுதி IPP கட்டிடம் , பழைய IPP கட்டிடம் மெயின் சுவிட்ச் மீட்டர் பழுதேர்பட்டு உள்ளதால் அதை புதியதாக மாற்றி பொருத்தி சீர் செய்து மின் விளக்குகளை எரிய வைக்க தோராய செலவினம் ரூ. 7500/— ஆகும் . இப்பணியை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு ;- மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்2350/2019/இ1)**

## <u>மன்றப்பொருள்</u>

நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு சொந்தமான வாகனம் டம்பர் பிளேசர் எண் . TN-31/AE-0781 உபயோகப்படுத்தப்பட்ட வாகனம் “ தூய்மை இந்நியா திட்டத்தின் கீழ் மாற்று பணிகள் மாற்றப்பட்டதால் உபயோகம் அற்ற நிலையில் உள்ளது . எனவே மேற்படி வாகனத்தை சுகாதார பணிகள் அவசர அவசியம் கருதியும் பொது மக்கள் நலன் கருதியும் “ கழிவு நீர் சேகரிப்பு வாகனமாக “ மாற்ற மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு ;- மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.1688 /2019/இ1)**

துப்புரவு அலுவலர் ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்

<u>மன்றப்பொருள்</u>

நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு சொந்தமான வாகனம் டம்பர் பின் எண் . TN-31/AJ-5990 உபயோகப்படுத்தப்பட்ட வாகனம் " துாய்மை இந்நியா திட்டத்தின் கீழ் மாற்று பணிகள் மாற்றப்பட்டதால் உபயோகம் அற்ற நிலையில் உள்ளது . எனவே மேற்படி வாகனத்தை அவசர அவசியம் கருதியும் பொது மக்கள் நலன் கருதியும் நகரில் குடிதண்ணீர் தட்டுபாடு ஏற்படும் காலங்களில் குடிநீர் வழங்குவதற்கு எதுவாக "குடிநீர் வாகனமாக மாற்ற" மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு ;- மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.1687 /2019/இ1)

துப்புரவு அலுவலர் ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்

## <u>மன்றப்பொருள்</u>

நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட வார்டு எண் . 30ல் உள்ள சரவணபுரத்தில் மக்கம் குப்பைகளை பிரித்து எடுக்கும் மையத்தில் தண்ணீர் வசதி இல்லாமல் சுகாதார பணியாளர்கள் மிகவும் சிரமப்படுகின்றனர் . எனவே மேற்படி இடத்தில் தண்ணீர் வசதி செய்யும் வகையில் அப்பகுதியில் ஒரு ஆழ் குழாய் கிணறு அமைக்க தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ. 450000/— ஐ குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு ;- மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். /2019/இ1)

நகராட்சி பொறியாளர்

ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்

**<u>மன்றபொருள்.11.</u>** நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு சொந்தமான 62.5 KVA ஜெனரேட்டர் அலுவலக பயன்பாடு , 25 KVA ஜெனரேட்டர் நகராட்சி மருத்துவ மனை பயன்பாடு மற்றும் 40 KVA ஜெனரேட்டர் மேல்பாதி OHT குடிநீர் பயன்பாட்டில் பயன்படுத்தப்பட்டு வருகிறது . இந்த மூன்று ஜெனரேட்டர்களையும் ஆயில் சர்வீஸ் மற்றும் ஜெனரல் சர்வீஸ் செய்யவும் இதற்குண்டான பட்டியல் தொகையை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு ;- மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 2252/2019/இ1)

## <u>மன்றப்பொருள்</u>

நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட வார்டு எண்.3ல் உள்ள முள்ளிகிராம்பட்டு நகராட்சி பள்ளியில் புதியதாக கட்டப்பட்ட இரண்டு வகுப்பறைகளில் கூடுதல் பணிகள் செய்ய வேண்டியுள்ளது . மேற்படி பள்ளி கட்டிடத்தில் கூடுதல் பணிகள் செய்வதற்கு தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ. 725000/– ஐ கல்வி வரி நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு ;- மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். /2019/இ1)

நகராட்சி பொறியாளர் ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்

## <u>மன்றப்பொருள்</u>

நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட வார்டு எண்.3ல் உள்ள முள்ளிகிராம்பட்டு பகுதியில் பொது மக்கள் குடி தண்ணீர் வசதியில்லாமல் சிரமப்பட்டு வருகின்றனர் . எனவே பொது மக்கள் வசதிக்காகவும் , குடி தண்ணீர் பிரச்சனையை தீர்க்கும் வகையில் அப்பகுதியில் மினி பவர் பம்பு அமைக்க தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ. 400000/– ஐ குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு ;- மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.          /2019/இ1)

நகராட்சி பொறியாளர்                                                                        ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்

<u>மன்றப்பொருள்</u>

நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட வார்டு எண். 16 ஜீவா நகரில் உள்ள பகுதியில் பொது மக்கள் குடி தண்ணீர் வசதியில்லாமல் சிரமப்பட்டு வருகின்றனர் . எனவே பொது மக்கள் வசதிக்காகவும் , குடி தண்ணீர் பிரச்சனையை தீர்க்கும் வகையில் அப்பகுதியில் மினி பவர் பம்பு அமைக்க தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ. 400000/— ஐ குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு ;- மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.         /2019/இ1)

நகராட்சி பொறியாளர்                                                    ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்

**<u>மன்றப்பொருள்</u>**

நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட வார்டு எண். 30 சரவணபுரத்தில் உள்ள பொது மக்கள் தண்ணீர் வசதிக்காக சின்டெக்ஸ் டாங்குடக் கூடிய மினி பவர் பம்பு அமைக்குமாறு கோரியுள்ளார்கள் . . எனவே பொது மக்கள் வசதிக்காகவும் , குடி தண்ணீர் பிரச்சனையை தீர்க்கும் வகையில் அப்பகுதியில் மினி பவர் பம்பு அமைக்க தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீடு ரூ. 400000/– ஐ குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு ;-    மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.          /2019/இ1)

நகராட்சி பொறியாளர்                                        ஆணையாளர் மற்றும் தனி அலுவலர்